கடவுள் துணை.

திருவண்ணாமலை,

உண்ணாமுலையம்மன்பதிகம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமிமுதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

நமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

எமது அச்சுக்கூடத்தில் விற்பனைக்குத்தயாராயிருக்கும்

புத்தக விளம்பரம்.

இராமாயணம் கிளேஸ் 2-வால்யூம் ஒஸ்திபதிப்பு	4	0	0
சாதாரண பாரதம் 4-வால்யூம்	4	0	0
இந்துலா [அச்சிலிருக்கிறது]	4	0	0
சோதிடசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	8	0
இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	0	0
இந்தியன் பினல்கோட் ராயல் ஒஸ்திபதிப்பு	3	0	0
கிராம முனிசிப்கோர்ட் ராயல் கிளேஸ்	3	0	0
கிரிமினல்கோர்ட் சட்டம் [அச்சிலிருக்கிறது]	2	0	0
பிரபஞ்சவுற்பத்தி ஒஸ்திபதிப்பு	2	0	0
சாதாரண இராமாயணம்	1	8	0
உலகவிசித்திரக்கதை ஒஸ்திபதிப்பு	1	0	0
விக்கிரமாதித்தன் கதை கிளேஸ்	1	0	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
விராடபர்வம் ராயல் 8-பேஜ் லெத்தோபடத்துடன்	0	12	0
பட்டணத்தார்புராணம் ராயல் 16-பேஜ் லெத்தோபட	0	12	0
பார்வதிபரணீயமென்னும் விஷவைத்தியசிந்தாமணி	0	12	0
கஷ்டஜாதகம் கிளேஸ்	0	8	0
கலகண்ட ஆருடம் கிளேஸ்	0	8	0
மூலிகைமர்மம் கிளேஸ்	0	8	0
திருத்தணிகைச் சன்னதிமுறை திக்கு	0	8	0
சரீரசாஸ்திரம் கிளேஸ்	0	8	0
சிவவாக்கியம் 1000-ம்பாடல்கள் கிளேஸ்	0	8	0
மனமோகனக்கண்ணாடி கிளேஸ்	0	8	0
ஜெகத்ரக்ஷா கிளேஸ்	0	8	0
புலவுநூல் இந்தியா சமையல்சாஸ்திரம் கிளேஸ்	0	8	0
கண்கட்டுவித்தை	0	6	0
ஷை 2-ம் பாகம்	0	6	0
சகாதேவர் சோதிடநா	0	6	0
திருநேத்திரசிந்தாமணி	0	5	0
பெண்கள் ருதுஜெனனஜாதகம்	0	4	0
சர்வபிரயாண சகுனசாஸ்திரம்	0	4	0
அகடவிகட சம்சாரி	0	4	0
வாந்திபேதி நிவாரணு	0	2	0
சுருக்குபஞ்சபட்சி	0	2	0
சைவானுஷ்டானவிதி	0	2	0
அவிவேகபூரணகுருகதை	0	1	6
விபூதி ருத்திராட்ச மகத்துவம்	0	1	3

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமிமுதலியார்,

நெ. 12. சட்டண்ணாநாய்க்கன் வீதி,

தூனே போர்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

உண்ணாமுலையம்மன்பதிகம்.

பொன்னஞ்சுமேனியும் பொருப்பஞ்சுவடிவமும்
　புலியஞ்சு கின்றநடையும்
புகழஞ்சுகரமுமிச் செகமஞ்சுமாய்கையும்
　போரஞ்சு கின்றபடையும்
மின்னஞ்சுகுழலும் மீனஞ்சுபார்வையும்
　மதியஞ்சு கின்றமுகமும்
மிடியஞ்சுகருணையுங் கொடையஞ்சுமீகையும்
　மேதினி வளக்குமழகும்
பன்னஞ்சுபுகழுமிப் படியஞ்சுகமலமும்
　பரமனொடு கொஞ்சுமொழியும்
பாரண்டமீரேழு மீன்றபார்வதியுனைப்
　பாலனெவ் வாறுபுகழ்வேன்
அன்னமஞ்சுங்கிள்ளை புள்ளுமஞ்சும்அத்தி
　அரியுமஞ்சும் சோலைசூழ்
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
　உண்ணாமுலைக் கெவுரியே 1

பரிதிமதியன்னைநீ பங்கயன்தாயிநீ
　பாரே ழளந்தவளுநீ
பரமனதுமுடியிலுங் கையிலும்மெய்யிலும்
　பாகத் தமர்ந்தவளுநீ
விரித்தமயிலேறிவிளை யாடுமுருகேசனொடு
　விண்ணவரை யீன்றவளுநீ
வேதம்நீவேதமுத லாதிநீயென் றுடலி
　லுறவாடு முயிரும்நீயே
கருவுநீகருவிலுறை யுருவுநீகடையிலே
　காலனாய் வந்தவளுநீ
கருதரியரூபிநீ பொல்லாதநீமிநீ
　கார்த்துரட் சிப்பவளுநீ

அறிவற்றசேயெனக் குறவுன்னையன்றியா
ரகிலத்தி லுரைசெய்யம்மே
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
உண்ணாமுலைக் கெவுரியே. 2

கல்லாதபிள்ளைநெறி நில்லாதபிள்ளைநின்
கருணையறி யாதபிள்ளை
கற்றறிவிலாப்பிள்ளை சொற்சுவையிலாப்பிள்ளை
கஷ்டநிஷ் டூரபிள்ளை
பொல்லாதபிள்ளையறி வில்லாதபிள்ளையொரு
போக்குநீக் கற்றபிள்ளை
போக்கிரிப்பிள்ளையுனை நோக்காதபிள்ளைநான்
புத்தியில் லாதபிள்ளை
வில்லானைப்பழித் திடுமடவரமுலிலே
மெய்வலி வழிந்தபிள்ளை
மெய்யிலாப்பிள்ளையொரு பொய்விடாப்பிள்ளையெனின்
பெற்றாள் சலிப்புறுவளோ
அல்லாதபிழைபொறுத் தாளுவார்பின்னெனக்
காருளா ருரைசெய்யம்மே
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கெவுரியே. 3

மதியஞ்சிமனமஞ்சி மாய்கையெல்லாமஞ்சி
மண்டலச் செய்கையஞ்சி
மற்றுமுளகிளைவஞ்சி கற்றெனவெலாமஞ்சி
மனதினுங் காரமஞ்சி
விதியஞ்சிவினையஞ்சி விகடருறவுக்கஞ்சி
வருகால னுக்குமஞ்சி
வினையென்றபெருவா ரிதிக்கஞ்சியுனையன்றி
வேறில்லை யென்றுமஞ்சி
கதியென்றுவுந்தனிரு பாதகமலத்தடியில்
தஞ்சமென் றஞ்சிநின்றேன்
தாயாகித்தந்தையாய் காக்கின்றயீஸ்வரி
தாரிணி வேறுமுளதோ
அதிபாலமதிசூர் சடாடவிக்கடவுளார்
அங்கத் தமர்ந்ததாயே

அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 4

மன்னுமுருகுங்கான வின்னுமுருகும்பெரிய
மலையுமொரு காலமுருகும்
மாசிலாத்தங்கமுங் காய்ச்சினாலுருகிடும்
மற்றுநவ லோகமுடனே
பொன்னுமுருகும்நீண்ட பாரையுருகும்மற்ற
பொருளும்நீ ராககளையும்
பொல்லாதபுலிகரடி சிம்மமும்ராட்சதப்
பேயுமொரு காலிரங்கும்
என்னாரியஜீவரா சிகளின்றதாயிநீ
யென்மீ திரங்கவிலையே
யென்னமோவுன்மனமி தின்னவிதமென்றுரை
யின்னமொரு வுதவியுளதோ
அன்றுமின்றும்மென்று மின்னும்சிறுகன்னியென்
றகிலம் புரந்ததாயே
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 5

பூமிதனிலெண்பத்து நான்குலக்ஷம்ஜீவ
பேதமா மதனில்மிக்கப்
புண்ணியவசத்தின்மா னிடவுருவமெய்துமுன்
பாதம் தொழாதபேர்க்கு
தாமதசயித்தியம் பித்தகுன்மஞ்சூலை
தலையிடிப் பாண்டுகுஷ்டம்
தந்தநோய்குலையெரிவு மந்தகாசம்பிளவை
தாள்திறக் காதபூட்டு
தேமண்டலக்கிரிமி வெட்டையுங்கிரந்திபடை
திருஷ்டியி லெரிச்சல்வாதம்
தெளியாதஜன்னிக் கழிச்சல்கிராணிச்சிதம்
தீண்டுவிஷ பூச்சனந்தம்
ஆமிந்தநோயெலா முன்னடியர்வமிசத்தா
ளணுகாமல் கார்ப்பையன்றோ
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 6

அந்திமுனிசந்திமுனி அழகுளஜடாமுனி
அடங்காத லாடமுனியும்
ஆரவமதுகேளாத வூமைமுனி தபமுனி
அருஞ்சுடலை கார்க்குமுனியும்
வந்திகாட்டேரியிரு ளன்குரளியொண்டிமுனி
வாதுமிடு வேதமுனியும்
வம்பிடுமேவலும் பம்புசூனியமுதல்
வழிபடும் பேய்பிசாசும்
தந்த்ரமாயிடுமுறை மாரணம்பேதனம்
தானென்ற பூதகணமும்
தயவிலாக்குட்டியொடு வைப்புக்கருப்பனும்
தனிபால கிரகமெதுவும்
அந்திபகலுன்கோயில் வலமாகவந்திடில்
அலைகடல் கடக்குமன்றோ
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 7

எண்ணரிய நாற்பயன் வுளவுமறியேனுனை
யெழுத்தால் துதிக்கவறியேன்
எந்த்ரமறியேன்செய்ய மந்த்ரமறியேன்மற்ற
யேதுமொரு சூதுமறியேன்
பண்ணிசைகள்வழுவாது பாடவறியேன்படும்
பாட்டையுஞ் சொல்லவறியேன்
பக்திவிசுவாசநெறி நிற்கவறியேன்கொடும்
பாவியொரு விரதமறியேன்
கண்ணீர்சொரிந்தழவு மறிகிலேனளவிலாக்
கவலையும் புகலவறியேன்
கற்றுமறியேனொரு சுற்றமறியேன்தமிழ்க்
கவியோது மார்க்கமறியேன்
அன்றுகருவுருகடந் தின்றளவுமென்னுளவு
அன்னைநீ யறியாததோ
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 8

வஞ்சமோபிதுவென்ன நெஞ்சமோவுன்னுடைய
வளமையிப் படியதாமோ

வாதமோவென்மீது பேதமோவில்லையொருவர்
வந்துகோட் சொன்னவிதமோ
கொஞ்சமோவெனையாள பஞ்சமோவுன்செவிக்
கேளாத கொள்கைதானோ
கோபமோமற்றென்ன தாபமோகூறினால்
வாய்முத் துதிர்ந்துவிடுமோ
தஞ்சமென்றஞ்சிவரு மைந்தரைக்காராது
தாயிக் கிசைந்தவிதமோ
தாரெலாம்பெற்றபே ராருளாரினியெனை
தடுத்தாண்டு கொள்ளுமம்மே
அஞ்சலெனுமொழிகாற்றில் பஞ்சிட்டவாறுபோ
லரம்வளர்த் திடுதெய்வமீ
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 9

பொல்லாதமானிடப் பிறவிதந்தென்னையொரு
பூமிக்குள் பாரமாக்கி
பிள்ளைபெண்ஜாதியெனுந் தொல்லைக்குள்நடுவாக்கி
புத்திபல வெண்ணமாக்கி
நில்லாதபொன்பொருளில் நினைவாக்கிநிதியுங்
கொடாமல்நிற் பாக்யனாக்கி
நீந்தவொண்ணாதமிடி மேலாக்கியெண்ணினால்
நிலையிலாக் காயமாக்கி
நல்லாரெனப்பகல் பகட்டுமடவாருக்கு
நாள்போக்கி நாளுக்குநாள்
நமனுக்குஆளாக்க வோவென்னையின்றநீ
நடனங்க ளாட்டுகின்றாய்
அல்லாமலினியிருவர் மடிபிடித்தமராடல்
அழகல்ல வருள்செய்யம்மே
அண்ணாமலைக்குரிய விண்ணோர்தமக்கரிய
வுண்ணாமுலைக் கௌரியே. 10

உ

தெய்வமேதுணை.

உமையவள் நாமாவளி.

கண்ணார்க்கொருகாற் பின்னவளே
மண்ணுக்கொருகால் முன்னவளே. 1

பச்சைக்கிளியே பைங்கிளியே
உச்சிக்கிளியே யூன்கிளியே. 2

அரவாபரண வரத்தாளே
கருணாகரியே சிரித்தாளே. 3

வல்லிக்கொடியே வளர்கொடியே
தில்லைக்கொடியே திகழ்கொடியே. 4

உண்ணாமுலையெனு மூர்கொடியே
பண்ணாரயன்றொழு பார்கொடியே. 5

பரமன்குருவைப் பெற்றவளே
அரமதுமுடிவர முத்தவளே. 6

பாரிரேழாய் பூர்த்தவளே
ஆருயிரெவையுங் கார்த்தவளே. 7

அத்தியையேந்துமென் னம்மணியே
புத்தியதீந்தருள் பொன்மணியே. 8

சிவமொடுசேர்ந்த சிரோன்மணியே
தவமதில்தேர்ந்த மனோன்மணியே. 9

முன்னும்பருவ முகக்கொடியே
இன்னும்பருவ மிளங்கொடியே. 10